# பிரதான தரவு ஆவணம்
## தங்க பாதுகாப்பு வைப்பு வசதி

| | |
|---|---|
| தகைமை | • 18 மற்றும் அதற்கு அதிகமான வயதுடைய இலங்கையில் வதிவிட உரிமையைக் கொண்ட நபர்கள் |
| தயாரிப்பு விளக்கம் | உங்களின் அவசர நிதித் தேவைகளின் போது கைகொடுக்கக்கூடிய மக்களுக்கு நட்பான வங்கித் தீர்வாக Gold Safe Keeping அமைந்துள்ளது. வாடிக்கையாளர் தமது தங்க நகையை கொண்டு வருகையில், சகல நகைகளும் அவற்றின் தூய்மை மற்றும் எடை பரிசோதிக்கப்படும். அதன் பின்னர் வங்கியினால் "தங்க பாதுகாப்பு வைப்பு சான்றிதழ்" வழங்கப்படும். அதில் நகையின் விளக்கம், தரம் மற்றும் எண்ணிக்கை போன்றன விபரிக்கப்பட்டிருப்பதுடன், அவற்றின் சந்தைப் பெறுமதி மற்றும் பாதுகாப்பு வைப்பு கட்டணம் போன்றனவும் குறிப்பிடப்பட்டிருக்கும். 12 மாத காலப்பகுதிக்கு பாதுகாப்பு வைப்புக் கட்டணம் அறவிடப்படுவதுடன், அதன் பின்னர் நகைகளை மீளப் பெறலாம் அல்லது மேலும் 12 மாதங்களுக்கு புதிய விலை மதிப்பீட்டில் புதுப்பித்துக் கொள்ளலாம். நகைகளை குறித்த 12 மாத காலம் நிறைவடையும் முன்னரும் பெற்றுக் கொள்ளலாம். அந்த சந்தர்ப்பத்தில், வங்கியில் காணப்பட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் பாதுகாப்பு வைப்புக் கட்டணம் கணிப்பிடப்படும். அவசர பணத்தேவைகளின் போது சான்றிதழை அடைமானமாக சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். |
| தயாரிப்பு உள்ளம்சங்கள் | • வைப்புகள் எதுவும் அவசியமில்லை<br>• போட்டிகரமான வைப்புக் கட்டணங்கள்<br>• பாதுகாப்பு வைப்பு காலம் 1 வருடம் வரை<br>• பாதுகாப்பு வைப்பு தங்கத்துக்கு இலவச டகாஃபுல் காப்பீடு<br>• அமானா வங்கியில் உங்களின் தங்க பாதுகாப்பு வைப்பு சான்றிதழை ஒப்படைத்து அவசர நிதி வசதியை பெறுவதற்கான தகைமை |
| தேவையான ஆவணங்கள் | • தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு / சாரதி அனுமதிப் பத்திரம்<br>• மதிப்பீடு செய்யப்பட வேண்டிய தங்க நகைகள்<br>• பூர்த்தி செய்யப்பட்ட பாதுகாப்பு வைப்புக்கான விண்ணப்பப்படிவம்<br>• அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யவும் அல்லது நிறுவன இணையத்தளத்தினூடாக டவுன்லோட் செய்யவும்: https://www.amanabank.lk/application-downloads.html<br>• முகவரி உறுதிப்படுத்தல் ஆவணங்கள் (வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள முகவரி, தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியிலிருந்து வேறுபட்டால்) |

| | |
|---|---|
| கட்டணங்கள் மற்றும் கூலிகள் | தற்போதைய கட்டணங்கள் மற்றும் கூலிகள் எமது நிறுவன இணையத்தளத்தில் காணப்படும்: https://www.amanabank.lk/tariff-services.html |
| நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | தயாரிப்பின் தகவல்கள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றன காலா காலத்தில் மாறுபடும். எனவே, பிந்திய தகவல்கள் மற்றும் தற்போது அமலிலுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு அருகிலுள்ள கிளையுடன் தொடர்பு கொள்ளவும் அல்லது எமது நிறுவன இணையத்தளத்தை பார்க்கவும்: https://www.amanabank.lk/pdf/application-downloads/general-business-conditions.pdf |
| கருத்தளிப்பு மற்றும் முறைப்பாடுகள் | எமது வாடிக்கையாளர் தீர்வுகள் நிலையத்துடன் 24x7 நேரமும் நீங்கள் தொடர்பு கொண்டு, உங்கள் கருத்துகளையும், முறைப்பாடுகளையும் மேற்கொள்ளலாம். உங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக எமது அணியினர் தயாராக இருப்பார்கள்.<br><br>வாடிக்கையாளர் தீர்வு நிலைய இலக்கம் :+94 11 7 756 756<br>மின்னஞ்சல் : info@amana.lk \| feedback@amana.lk<br>எமது இணையத்தளத்தில் உங்களின் விசாரணைகளை சமர்ப்பிப்பதற்கு www.amanabank.lk<br><br>எவ்வாறாயினும், உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், பின்வரும் முகவரிக்கு தபால் மூலமாக அல்லது மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளலாம்:<br>The Manager - Service Quality Assurance<br>Amana Bank,<br>No. 486, Galle Road, Colombo 03<br>அல்லது e-mail servicequality@amana.lk |
| | அதன் பின்னரும் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், சுயாதீன நிதி குறைகேள் அதிகாரியின் சேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். நிதிசார் குறைகேள் அதிகாரியின் பின்வரும் அலுவலகத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.<br><br>Financial Ombudsman,<br>No.1, Bethesda Place, Milagiriya, Colombo 04.<br>Telephone: + 94 11 2595624 Fax: +94 11 2595625<br>Website: www. nancialombudsman.lk |